**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 124/2024**
**அ.சா. 2 – திரு.சுமித்யா**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.07.2026.

* * * * * * *

**(எதிரி ஆஜர் இல்லை. 355 பிஎன்எஸ்எஸ் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அ.சா.2 மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எனது அப்பா காலை 7–7.30 மணியளவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டார் போலிசார் சம்பவ இடத்திற்கு காலை வரும்போது 10–10.30 மணி இருக்கும். 03.02.2024 ஆம் தேதி எதிரி இரு சக்கர வாகனத்தை அடித்து நொறுக்கியதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு அடித்து நொறுக்கிய வாகனத்தின் பகுதிகள் சிதறி இருந்தது என்றால் சரிதான். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். ஜெகதீஸ்பாண்டியன் வாகனத்தில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்துவிட்டு, பெட்ரோல் கேனுடன் அந்த பக்கமாக ஓடிவிட்டார் என போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால், அந்த பக்கமாக ஓடினார் என்று சொன்னேன், கேனுடன் ஓடினான் என்று சொல்லவில்லை. நான் ஆசிரியையாக பணிபுரிகிறேன். என்னிடம் காட்டப்படும் 161(3) கு.வி.மு.ச கீழான வாக்குமூலத்தில் பெட்ரோல் கேனுடன் ஓடியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்று நான் உண்மையைத்தான் சொன்னேன்.

எவ்வளவு தூரம் ஓடியபோது நான் பார்த்தேன் என்றால் எங்கள் வீட்டின் தெற்கு புறம் ஒரு வீடு கடந்து ஓடியதை பார்த்தேன். வேறு யாரும் அவ்வாறு ஓடியதை பார்த்தார்கள் என்றால், எனது அப்பா, எனது தங்கை, எனது கணவர் ஆகியோர் பார்த்தோம். அவ்வாறு ஓடியதை வீட்டின் அருகில் இருந்தவர்கள் யாரேனும் பார்த்தார்களா என்றால் யாரும் பார்க்கவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சத்தம் கேட்டு வெளிச்சமாக இருந்தது, நான் எனது

அப்பா, எனது தங்கை, எனது கணவர் கதவைத்திறந்து வெளியே வந்து பார்த்தபோது ஜெகதீஸ்பாண்டியன் என்பவர் கையில் வைத்திருந்த கேனில் உள்ள பெட்ரோலை Yamaha இருசக்கர வாகனத்தில் ஊற்றி தீ வைத்தார். எங்களைப்பார்த்ததும் எங்கள் வீட்டிற்கு முன்புறம் இருந்த தென் வட பாதையில் தெற்கு பக்கமாக சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ள விபரத்தை போலிசார் விசாரணையின்போது சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வாகனமானது இடது பக்கம் இருந்ததா, வலது பக்கம் இருந்ததா என்றால் எங்கள் வீட்டிற்கு எதிரே உள்ள போஸ்ட் கம்பம் அருகே நிற்க வைக்கப்பட்டிருந்தது. அந்த பாதையானது ஏடி பள்ளிக்கு செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடத்திற்கும் 10 அடி தூரம்இருக்கும். நாங்கள் வெளியே வரும்போது வாகனம் மளமளவென எரியத்தொடங்கியது. சுமார் எவ்வளவு நேரம் எரிந்தது என்றால், அது எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

தீயை அணைக்க முற்பட்டேனா என்றால், மற்றவர்கள் முற்பட்டார்கள். வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்தில் கரி படிந்திருந்ததா என்றால் இருந்தது. என் மீதும், என் அம்மா மீதும் எதிரிகள் கொடுத்து புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கானது கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அதுபோல் எனது சகோதரி, எனது தம்பி மீது தாக்கல் செய்த வழக்கானது கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது சகோதரியின் கணவர், என் கணவர் மற்றும் என் தம்பி மற்றும் என் தம்பியன் நண்பர்கள் அனைவரும் சேர்ந்து இந்த வழக்கின் எதிரியின் தம்பியை தாக்கியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் இருந்து எனது தம்பியையும், குடும்பத்தாரையும் காப்பாற்றவேண்டும் என்பதற்காக இரு சக்கர வாகனத்தை எரித்ததாக எனது குடும்பத்தார் அனைவரும் ஆலோசனை செய்து பொய்யாக எதிரிமீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

எதிரி எங்கள் இரு சக்கர வாகனத்தில் தீ வைக்க வில்லை என்றால்

சரியல்ல. வழக்கிற்காக இரு சக்கர வாகனம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனம் எரிந்து கிடந்ததை போலிசார் போட்டோ எடுத்தார்கள் என்றால் சரிதான். எரிந்து கிடந்த வாகனத்தின் உதிரி பாகத்தை போலிசார் எடுத்துச் சென்றார்கள். நாங்கள் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.17 17:30:33 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**